# DEPOSITION OF WITNESS
## (CHAPTER XXIII CODE OF CRIMINAL PROCEDURE )

**மாவட்ட உரிமையியல் மற்றும் நீதித்துறை நடுவர் நீதிமன்றம், வால்பாறை.**

**CC.No.19/2022**

**2025-ம் ஆண்டு நவம்பர் திங்கள் 25- ம் நாள் செவ்வாய்கிழமை குற்றம் முறையிடுபவரின்**

**அ.சா.10 -வது நபரின் வாக்குமூலம் (1969 ஆம் ஆண்டு 54-வது விதியின் ஏற்பாட்டின்படி)**

**திருமதி.லட்சுமி இளநிலை உதவியாளர் நிறைவேற்றுபவர் அவர்களால் உறுதிமொழி செய்யப்படுகிறது.**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| அ.சா. | - | 10 | தொழில் | - | உதவி ஆய்வாளர் (ஓய்வு) |
| பெயர் | - | குணசேகரன் | வட்டம் | - | சிதம்பரம், கடலூர் மாவட்டம் |
| த/பெ | - | கோவிந்தராஜன் | சமயம் | - | |
| கிராமம் | - | கண்ணன்குடி, ராமசந்திரா அவென்யூ | வயது | - | 61/2025 |
| சாதி | - | | | | |

**<u>25-11-2025</u>**

**( எதிரி ஆஜர்)**

(எதிரி தரப்பில் குவிமுச பிரிவு 317-ன் கீழான மனு தாக்கல் செய்யப்பட்டு அனுமதிக்கப்பட்டது)

(எதிரி தரப்பில் 359 BNSS-ன் கீழான சமாதான மனு தாக்கல் செய்யப்பட்டு மனு தள்ளுபடி செய்யப்பட்டு சாட்சி விசாரிக்கப்பட்டார்.)

**<u>முதல் விசாரணை:</u>**

1. நான் தற்போது மேற்கண்ட முகவரியில் குடியிருந்து வருகிறேன். நான் கோவை மாவட்டம், காவலர் பயிற்சி மையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்து கடந்த 31.05.2025-ம் தேதி பணியிலிருந்து ஓய்வு பெற்றேன். கடந்த 27.01.2022-ம் தேதி நான் வால்பாறை காவல் நிலையத்தில் உதவி ஆய்வாளராக பணிபுரிந்த போது, வால்பாறை குரங்குமுடியை சேர்ந்த மதனகோபால், த/பெ.ராதாகிருஷ்ணன் என்பவரது புகார் மனு ரசீது எண்.30/2022, நாள் 28.01.2022-ம் தேதி திரு.சபரிமுத்து உதவி ஆய்வாளர் கொடுத்த ரசீது மீது மேல் நடவடிக்கை மேற்கொண்டு, 11.04.2022-ம் தேதி வால்பாறை காவல் நிலைய குற்ற எண்.93/2022, சட்டபிரிவுகள் 147, 294(b), 348, 452, 506(2)

இ.த.ச.வின் படி வழக்கு பதிவு செய்தேன். **நான் பதிவு செய்த முதல் தகவல் அறிக்கை அ.சா.ஆ.4-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இரவு நேரம் என்பதால் சம்பவயிடம் செல்ல இயலவில்லை. மறுநாள் 12.04.2022-ம் தேதி காலை 07.00 மணிக்கு சம்பவயிடமான KGR எஸ்டேட், குரங்குமுடி சென்று சாட்சிகள் பொன்னன் மற்றும் ஜெயக்குமார் முன்னிலையில் சம்பவயிடத்தை பார்வையிட்டு பார்வை மகஜர் மற்றும் மாதிரி வரைபடம் தயார் செய்தேன். **அந்த பார்வை மகஜர் அ.சா.ஆ.5-ஆகவும், மாதிரி வரைபடம் அ.சா.ஆ.6-ஆகவும் குறியீடு செய்யப்படுகிறது.** பின்னர் சாட்சிகள் மதனகோபால், செந்தில்குமார், வினோத்குமார், பன்னீர்செல்வம், ஈஸ்வரன், சிம்சன், பொன்னன் மற்றும் ஜெயக்குமார் ஆகியோர்களை தனித்தனியே விசாரணை செய்து வாக்குமூலம் பதிவு செய்தேன். சாட்சிகளின் வாக்குமூலத்தின் அடிப்படையிலும், எனது புலன் விசாரணை அடிப்படையிலும் சம்பவம் உண்மை என்று தெரியவரவே எதிரிகளை தேடிச்சென்ற நிலையில் எதிரிகள் நீதிமன்றத்தில் முன்பிணை பெற்று சரணடைந்ததால் அவர்கள் மீதான கைது நடவடிக்கையை மேற்கொள்ளவில்லை. பின்னர் மனு ரசீது வழங்கிய உதவி ஆய்வாளர் திரு.சபரிமுத்து அவர்களை விசாரித்து வாக்குமூலம் பதிவு செய்தேன். 18.05.2022-ம் தேதி வழக்கின் சட்டப்பிரிவினை 147, 294(b), 348, 452, 506(2) இ.த.ச.விலிருந்து சட்டப்பிரிவுகள் 148, 294(b), 348, 452, 506(2) இ.த.ச.வாக பிரிவு மாற்றம் செய்து, பிரிவு மாற்றம் அறிக்கை தயார் செய்தேன். **அந்த பிரிவு மாற்றம் அறிக்கை அ.சா.ஆ.7-ஆக குறியீடு செய்யப்படுகிறது.** இத்துடன் தனது புலன் விசாரணை முடித்து 18.05.2022-ம் தேதி 1-ம் எதிரி மீது சட்டப்பிரிவுகள் 148, 348, 506(2) இ.த.ச.-வின் படியும், 2, 4, 12, 14, 17, 21, 23 மற்றும் 24 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 148, 348, 452, 506(2) இ.த.ச.-வின் படியும் எதிரிகள் 10, 18 மீது சட்டப்பிரிவுகள் 148, 294(b), 348, 506(2) இ.த.ச.-வின் படியும், எதிரிகள் 3 , 5 முதல் 9, 11, 13, 15, 16, 19, 20 மற்றும் 22 எதிரிகள் மீது சட்டப்பிரிவுகள் 148, 348, 506(2) இ.த.ச.-வின் படி குற்ற இறுதியறிக்கை தயார் செய்து நீதிமன்றத்தில் சமர்ப்பிக்கிறேன்.

<u>எதிரிகள் தரப்பில் குறுக்கு விசாரணை:</u>

1. சம்பவயிடம் வனப்பகுதி உள்ள இடம் என்றால் தேயிலை எஸ்டேட் ஆகும். அந்த எஸ்டேட்டை சுற்றி மரங்கள் நிறைந்து காடாக உள்ளது என்றால் சரிதான். வழக்கமாக மாலை 05.00 – 06.00 மணியளவிலேயே அந்த பகுதி இருட்டு பகுதியாக காணப்படும் என்றாலும், மனித நடமாட்டம் இருக்காது என்றாலும் சரிதான். சம்பவம் குறித்து தகவல் எப்போது கிடைத்தது என்றால் நான் தகவலை பெறவில்லை. எனக்கு எப்போது தகவல் கிடைத்தது என்றால் 11.04.2022-ம் தேதி இரவு 20.00 மணிக்கு CSR 30/2024-ன் படி மேல் நடவடிக்கை எடுத்து சட்ட கருத்துரை பெற்று அதன் அடிப்படையில் உயர் அதிகாரி அறிவுறுத்தலின் படி, முதல் தகவல் அறிக்கை பதிவு செய்தேன். நான் சம்பவம் நடந்த உடனேயே சம்பவயிடம் சென்று விசாரணை மேற்கொள்ளவில்லை என்றால்

சரிதான். முதல் தகவல் அறிக்கை பதிவு செய்து அதன் பின்பு சம்பவயிடம் சென்று விசாரணை மேற்கொண்டேன். நான் புலன் விசாரணையை எந்த தேதியில் ஆரம்பித்தேன் என்றால் 12.04.2022-ம் தேதி காலை 07.00 மணியளவில் சம்பவயிடம் சென்று புலன் விசாரணை மேற்கொண்டேன். நான் சொல்லுவது போல எந்த சம்பவம் நடைபெறவில்லை என்றாலும், நான் சரியாக புலன் விசாரணை மேற்கொள்ளவில்லை என்றாலும் சரியல்ல. உயர் அதிகாரி சொன்னதின் அடிப்படையில் எதிரிகளுக்கு எதிராக வழக்கு பதிவு செய்துள்ளேன் என்றாலும், நான் சொல்லுவது போல எதிரிகளுக்கும் வழக்கு சம்பவத்திற்கும் சம்பந்தமல்ல என்றாலும், நான் சரிவர புலன்விசாரணை மேற்கொள்ளலாம் எதிரிகளுக்கு எதிராக தவறாக வழக்கு பதிவு செய்துள்ளதால் வழக்கு நிலைநிற்கத்தக்கது அல்ல என்றாலும் சரியல்ல.

<u>மறு விசாரணை</u> :இல்லை

Taken down by/before me in open Court, read over/interpreted to the witness in the presence of the accused/Accused's pleader and admitted by the witness to be correct.

(ஒப்பம்.திருமதி.என்.மீனாட்சி,B.A., B.L.,)
மாவட்ட உரிமையியல் மற்றும்
நீதித்துறை நடுவர், வால்பாறை.